முருகப்பெருமான் துணை

**மகான் சூரியபகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.09.2022, சனிக்கிழமை

1. குருவருளால் மக்களை தேற்ற
குருபரனின் அவதாரமாக வந்த
ஆறுமுக அரங்கமகா தேசிகனே
அய்யனே உனது பெருமை கூறி
2. கூறியே நவகிரக நாயகர்களுள்
கூறிடுவேன் சூரியபகவான் யானும்
அருளாசிதனை சுபகிருது யாளிதிங்கள்
அறிவிப்பேன் இருபானை திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 25 நாள், 10.09.2022 சனிக்கிழமை)
3. வாரமதில் உலகம் நலமுற உரைப்பேன்
வல்லமை கொண்ட அவதாரம்
சரவணச் சுடரேற்றி அரங்கன்
சற்குருவாக நிகழ்த்தி இருக்க
4. இருக்கவே பிரணவக்குடில் தானும்
ஏழ்மை பசிபிணி விரட்டுகின்ற
வருத்தங்களை நாளும் அணுகா
வாழ்வில் போக்குகின்ற சபையாகும்
5. ஆகவே அரங்கமகான் தனை
ஆறுமுகப் பெருமானாக எண்ணி
வகைபட வணங்கி தீட்சை
வையகத்தார் ஏற்று வர
6. வருவதுடன் அரங்கன் காட்டும்
வஜ்ர பலம் போன்ற சுத்தசைவ
தரும நெறிகள் தன்னை மக்கள்
தத்துவமாக ஏற்று நடக்க
7. நடக்கவே வாழ்க்கை தன்னில்
நவகிரகங்களின்  வழித்துன்பம்
இடர்கள் என்பதே வாராத
எல்லாப் பாதுகாப்பும் கூடியே
8. கூடியே நவகிரக நாயகர்களுள்
கதிரவன் என் பரிபூரணமான
திடமான அருளும் தயவும்
தேகமனோ பலமும் பெற்று
9. பெற்றுமே அரச யோகம் பலம்
பிசகில்லா உயர்வு சிறப்பு
ஏற்றமான பதவி சுகம் யாவும்
என் ஆசிபட கதிர்வார தரிசணம்

10. தரிசணம் காணுகின்ற மக்கட்கு
தவராசன் அரங்கன் கரம்பட
அறிவிப்பேன் வரமாகக் கிட்டும்
அளவிலா வளர்ச்சி மேம்பாடு

11. மேம்பாடுகளை உணவாதிவணிக
மேலவர்கள் கண்டுத் தேற
நம்பிக்கை வைத்து அரங்கன்வழிவர
நாளும்நாளும் கண்டு உயர்வர்
அருளாசி முற்றே

–சுபம்–